கடவுளும் கோயிலும்.

3512

1933

PRESENTED BY:
V. PR. PL.
KASIVISWANATHAN
PAGANERI.

விலை 0—1—0 சோ. முருகப்பா.

ஸ்ரீ வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்
Y. M. C. ASSOCIATION PAGANERI.
பாகனேரி

கடவுளும் கோயிலும்.

'கடவுள்' என்ற சொல்லிலிருந்தே கடவுள் என்பதென்ன வென்பதை எளிதாக அறியலாம். கடவுள் என்ற சொல் ஒரு உருவத்தையோ ஒரு நிறத்தையோ ஆசாரத்தையோ பக்தியையோ மற்றெதையோ குறிப்பிடவில்லை. கடந்தது என்ற பொருளையே குறித்துநிற்கிறது. எதைக் கடந்தது? எல்லாவற்றையுங் கடந்தது. மனமானது எதை அறிகிறதோ அதைக்கடந்து நிற்பது. அறிவு எதை அறிகிறதோ அதையும் கடந்தது. ஒன்றிலும் பற்ருமல் ஒன்ருலும் அறியப்பட முடியாமல் வாக்கு மனம் அறிவு ஆகிய எதற்கும் அகப்படாமல் தோற்றமும் முடிவுமின்றி யிருக்கும் பொருளே கடவுள் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறது இதுவே ஹிந்து வேதத்தை ஒப்புக்கொள்ளும் கிளைச் சமயங்களின் முடிபாக இருக்கிறது.

பூமிதான் எல்லாவற்றுக்கும் ஆதார பூதமாக இருக்கிறதென்று கருதிய காலத்தில் பூமியைத் தெய்வமாகக் கருதி வணங்கினர். அப்பால் அதினின்றும் மிகுந்த சக்தியுடையதென்று நீரை வருணன் என்ற பெயரால் வணங்கினர். எதையும் அழித்து ஜோதிப் பொருளாக நிற்கும் தீயைத் தெய்வமாகக் கருதினர். பலமுள்ளதும் தோன்ருத் துணையாக உயிர்க்குறுதி பயப்பதுமான வாயுவை ஆராதித்தனர். அதினும் நுட்பமான ஆகாயம் இருக்கிறதென்ற அறிவு எற்படவே மற்றவை கடவு

ளன்று என்ற உணர்வு ஏற்பட்டது. தத்துவ ஆராய்ச்சி தலைப்படவே மனம் கடவுள் என்ற எண்ணம் எழுந்தது. அதனினும் நுணுக்கமான ஆன்மாதான் கடவுளென்று கூற முன்வந்தனர். என்றாலும் ஆராய்ச்சி முதிர முதிர கடவுளை இன்னதென்று வரம்புபடுத்திச் சொல்ல முடியாதென்ற முடிவுக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. வாயால் சொல்ல முடியாததும், கண்ணால் காண முடியாததும், மூக்கால் நுகர முடியாததும், மனத்தால் நினைக்க முடியாததும், அறிவால் ஆராய முடியாததுமான வஸ்துவே கடவுளாகும் என்ற முடிவுக்கு வந்து சேர்ந்தனர். அறிவுக்கும் அப்பாற்பட்டு ஆன்ம அனுபவத்தால் கடவுள் நிலையடைந்து அதுவாகவே தானாகி அறிவிழந்து இரண்டறக் கலந்து அனுபவிக்கக்கூடியதே கடவுள் காட்சி என்று எழுதி வைத்திருக்கின்றனர். இவ்வளவோடு கடவுளைப்பற்றிக் கூற முற்பட்டவர் முடிவுகட்டியிருக்கின்றனர்.

இப்படிப்பட்ட கடவுளே மண்ணாகவும் மலையாகவும் நீராகவும் நெருப்பாகவும் காற்றாகவும் சராசரப் பொருள்களாகவும் வானாகவும் இருசுடராகவும் மற்றைப் பொருள்களாகவும் விளங்குகிறார் என்பது பக்தர்கள் கூறும் அறவுரைகளாகும். இதிலிருந்து திரட்டியெடுக்கக்கூடிய பொருளென்னவென்பதைப் பார்க்குமிடத்து, கடவுள், ஒரு சக்தி சொரூபமாக இருப்பதாகவும் காற்றானது எப்படி உருவமின்றிப் பரந்து நிற்கிறதோ அப்படியே இன்னும் நுட்பமாகக் கடவுள் எல்லாவிடத்திலும் எல்லாப் பொருளிலும் கலந்து நிற்பதாகவும் பெறப்படுகிறது. உருவமுள்ளதானால் ஓரிடத்தில் கண்டப்பட்டு நிற்க வேண்டியதைத் தவிர, எல்லாவற்றிலும் கலந்தி

ருக்க முடியாது. கண்டிக்கப்படாமல் அகண்டமாக எல்லாவிடத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் பொருள் என்று கூறப்படுவதால் கடவுள் ஒரு சக்தியாக உலகில் பரந்து நின்று நடத்துகிறதென்பதே சமயப் பெரியார்கள் கொண்ட கருத்தாக இருக்கிறது.

இருநிலனய்த் தீயாகி நீருமாகி
இயமானனு யெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறுகி
ஆகாய மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தன்னுருவும் தானேயாகி
நெருநலையாய் இன்றுகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே.

என்று நாவுக்கரசடிகள் கூறுவதை இங்கு நோக்கலாம். எல்லாவற்றிலும் கடவுள் தன்மை யிருக்கிறதென்பது இதிலிருந்து இனிது விளங்கும். மற்ருெரு பாடலில் கூறுகின்ருர்.

ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்;
ஓரூரன் அல்லன்; ஓர்உவமன் இல்லி;
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவன்அருளே கண்ணுகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன்இறைவன் என்று எழுதிக் காட்டொணுதே

இதனுல் கடவுளுடைய தன்மை விளக்கப்படுகிறது. கடவுள் இப்படிப்பட்டவன் என்று எழுதிக்காட்டவே முடியாது என்று கூறப்படுகிறது. தாயுமானவர் கடவுளைப்பற்றிக் கூறும்போது இதுதான் கடவுள் என்று

சொல்ல வகையின்றிப் பல கேள்விகளைக் கேட்டு அக் கேள்விகட்கு ஏற்படும் விடையே கடவுளென்று காட்டுகிறார். எல்லாவற்றையும் கடந்து அப்பால் நிற்கும் ஒரு பொருளை—வாக்கும் மனமும் அறிவுங் கடந்ததென்று கூறப்படும் பொருளை வாக்கால் கூறுவதெப்படி முடியும்?

அங்கிங் கெனாதபடி எங்கும்பிர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்தது எது?

அங்கேயிருக்கிறது இங்கேயிருக்கிறதென்று சொல்லும்படி இருக்கக்கூடாது; எங்கும் எப்பொழுதும் பிரகாசமாகவே இருக்கவேண்டும்; ஒருகால் ஜோதி மிகுந்தும் குறைந்தும் இருண்டும் இருக்கக்கூடாது. துக்கம் துன்பமென்பன இன்றி என்றும் எப்பொழுதும் யாருக்கும் ஆனந்தமாகவே இருக்கவேண்டும். இவை தனித்தனியே இருக்கக்கூடாது. எல்லாம் ஓரே பொருளில் இருக்க வேண்டும் என்பது இந்த அரையடியின் பொருளாக இருக்கிறது. இன்னும்,

தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக் கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோடிக ளெலாம்
தந்தெய்வம் எந்தெய்வ மென்று
எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது?
எங்கணும் பெரு வழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கு முள்ள தெது? மேல்

கங்குல்பக லறநின்ற எல்லைபுள தெது? அது
    கருத்துக் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன உருவெளிய தாகவும்
    கருதி அஞ்சலி செய்குவாம்.

என்று கூறுகிறார். இப்பாட்டின் பொருளை நன்கு உணர்ந்தால் கடவுள் என்று எதைக்கூறுகிறார்கள் என்பது இனிது விளங்கும். காரைக்காலம்மையாரால் பாடப்பட்டு பதினோராந் திருமுறையிலிருக்கும் அற்புதத் திருவந்தாதிப் பாடலொன்று இங்கே கவனிக்கத்தக்கது.

அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது.

இப்பாடலிலிருந்து என்ன பெறப்படுகின்றது. கடவுளுக்கு அடியாராக அம்மையார் ஆட்படும்போதும் கடவுளின் திருவுருவங் காணப்படவில்லை. ஞானோதயம் பெற்று அந்தாதி பாடும்போதும் அதேநிலைதான் என்று கூறப்படுகிறது. மேலும் “உன்னுடைய கடவுளின் உருவமென்ன” என்று கேட்பாருக்கு என்ன பதிலளிப்பேன் என்று, தோன்றாது பரந்து நிற்கும் கடவுளிடம் விண்ணப்பிக்கின்றார்.

மணிவாசகர் திருவாசகத்தில் காணப்படும் பாட்டொன்று சிந்திக்கத் தக்கதாகும்.

பூதங்கள் தோறும்நின் றாயெனி னல்லால்
    போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுத லல்லால்
    கேட்டறி யோமுனைக் கண்டறி வாரை.

இப்பாட்டிலிருந்து போக்கும் வரவு மற்றவரென்று அறிந்த புலவர்கள் வாயால் பாடி ஆடித் துதிக்கிறதைக் காணமுடிகிறதே யன்றி உன்னை நேரிற் கண்டறிந்தவரைக் கேட்டுமறிந்தே னில்லையே யென்று கூறுகின்றார். இம்மாதிரியாகவே உருவமற்றவன் எங்கும் நிறைந்தவனென்று கூறிப்போவதைக் காணலாம். உண்மையாக நூல்களின் முடிவாகக் கூறப்பட்டிருக்கும் கடவுளின் தத்துவத்தைப் படித்துணர்ந்தால் கடவுளைப்பற்றி யாருக்கும் எவ்வித முரண்பாடும் இருக்க வகை கிடையாது. ஆனால் இந்தக் கடவுள் நெறியானது படிப்பற்ற ஜனங்களிடம் வரும்போது தங்களறிவுக் கேற்கக் கடவுள்களை சிருஷ்டிசெய்யவேண்டிய நிலைமை வந்துவிட்டது. குருக்களும் புராணக்காரர்களும் தத்துவத்தின் சாயையாக உருவவழிபாட்டைத் தொடங்கிக் கொடுத்தனர். அன்றே கடவுள் தன்மையைப்பற்றிய உணர்வு சிதைவுற்றுப் போய்விட்டது. கோயில்களில் பலர் பிழைப்புக்கருதிப் புகுந்தனர். வருவாய்க்கு வழிகோலினர். தங்குழுவினராகவே உண்ணவேண்டு மென்று கருதினர். சூழ்ச்சி செய்தனர். வெற்றி பெற்றனர். கடவுள் தத்துவ உணர்ச்சியை ஒழித்தனர். தத்துவக்கடவுள் மறைந்து நிற்கிறார். கோயில் விக்கிரகங்களே கடவுளென்று கொள்ளப்பட்டார். உயிருடனுள்ள ஆளைத் தேடாமல் அவருடைய உருவச்சிலையென்று கூறப்பட்டவைகளையே உண்மையென்று கருதுவதையொப்பக் கடவுள்நெறியும் கொள்ளப்பட்டிருக்கின்றது. அவ்வுருவமும் எண்ணற்றனவாகிவிட்டன. உருவமில்லாத கடவுளுக்கு எத்தனை உருவம். உணவுவேண்டாத கடவுளுக்கு எத்தனைவகையுணவு. அசுத்தப்படுத்த முடியாத பரிசுத்தமான கடவுளுக்கு எத்

தனை சுத்திகள்! நீரால் நனைக்கமுடியாத கடவுளுக்கு எத்தனைவகை அபிஷேகம்! எங்கும் நிறைந்து கட்டுக்கடங்காத கடவுளைக் கற்கட்டிடத்துள் வைத்து இரும்புக்கதவு போட்டு அலிகர் பூட்டினால் பூட்டிவைக்கின்றனர்! காமத்தைக்கடந்த கடவுளுக்குப் பள்ளியறைகள்! ஆணும் பெண்ணும் அலியுமல்லாத கடவுளை ஆணாக்கிப் பெண்ணாக்கி ஆடைகட்டி மஞ்சள் குங்குமம் அணிவித்துக் கல்யாணமும் செய்கின்றனர். தீட்டில்லாத் தெய்வத்திற்கு மாதாந்த ருது தோன்றுகிற தென்கின்றனர். அருள்வடிவென்று வேதங்கூறுங் கடவுள் ஆடுவெட்டாவிட்டால் ஆட்களின் தலையைப் பலிகேட்பதாகக் கருதப்படுகிறது. அம்மம்ம! ஒன்ரு இரண்டா! நினைத்தால் நெஞ்சுபொறுக்குதில்லையே? தத்துவ சொரூபமான கடவுள் நெறி ஒழிந்து உலக வியாபாரத்தில் பண்டை நூல்களையும் பெரியார்களையும் உபயோகித்துத் தீயவழிகளில் மக்கள் போய்க்கொண் டிருக்கின்றனர். பொதுவாக நோக்குமிடத்து விக்கிரக ஆராதனை செய்யும் மதம் ஹிந்து மதமேயாகும். முகமதியர் இதனை வெறுக்கின்றனர். புத்த மதத்தினர் புத்தர் உரையை மேற்கொள்ளாது புத்தர் உருவங்களை வைத்து வழிபடுகின்றனர். கிறிஸ்தவர்களும் ஏசுநாதர் சிலுவையையும் அவர் உருவங்களையும் வைத்து வணங்குகின்றனர். எப்படியானாலும் ஒவ்வொரு மதத்தினர்க்கும் சமயப் பொது ஸ்தாபனமாக விளங்குவது கோவிலென்று கூறலாம். மற்றும் பல வகைப்பட்ட ஸ்தாபனங்கள் இருந்தாலும், கோவிலொன்றே முக்கியமானதாக இருக்கிறது. அக்கோவில்தான் கடவுளை வணங்குவதற்குப் புனிதமான இடமாகுமென்றும் கருதப்படுகின்றது. அதனாலேயே அது முக்

கியமாக இருக்கிறதென்று கூறவேண்டியதில்லை. உலகிலுள்ள முக்கியமான மதங்களாக இருப்பன நான்கு. அவை கிறிஸ்து மதம், புத்த மதம், மகமதிய மதம், ஹிந்து மதம் என்பனவாகும். இவற்றுள் கிறிஸ்து மதத்தினரின் கோயில்களுள் கிறிஸ்து மதத்தினர் எவரும் செல்லலாம். எல்லோரும் ஒரு மாதிரியாகவே வணங்கலாம். எல்லா உரிமையும் எல்லா கிறிஸ்தவருக்கும் ஒரே மாதிரியாக வழங்கப்படுகிறது. வித்தியாசமில்லை. செல்வங் காரணமாகவோ பிறப்புக் காரணமாகவோ வேறெக்காரணம்பற்றியோ அவர்களில் எவரும் தடுக்கப்படுவதில்லை. எங்காவது ஒரு இடத்தில் பேதங் காட்டப்பட்டாலும் அது மத நூல்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதல்லவென்பதை நாம் உணரவேண்டும். அதே மாதிரி எந்த இடத்திலுள்ள எந்த புத்தர் கோவில்களிலும் புத்த மதத்தினர் எவ்விதத் தடையுமின்றி எவ்வித வித்தியாசமுமின்றிச் செல்லலாம். ஒருவர் வணங்குவது போல மற்றவரும் வணங்கலாம். வித்தியாசமும் உயர்வு தாழ்வுங் கிடையா. மகமதியர் பள்ளிகளிலும் வித்தியாசங் கிடையாது. அரசனும் மண்டிபோட்டுத் தொழலாம். செல்வனும் தொழலாம். வறிஞனும் தொழலாம். கிழவனும் தொழலாம். சிறுவனுந் தொழலாம். ஜாதிபேதம் உடல்பேதம் நிற பேதம் வாழ்க்கையின் பேதம் அறிவின்பேதம் எதுவுங் கிடையாது. "கடவுளைத் தொழுமிடத்தில், அவர் சந்நிதானத்தில் அவருடைய பிள்ளைகளுக்குள் எந்த பேதமுங் கிடையாது" என்னும் வாக்கை அவர்கள் அனுபவத்தில் கையாளுகின்றனர். இதில் ஏமாற்றுவதும் ஏமாறுவதுங் கிடையா. கோயில்கள் வெறும் வியாபாரமாகாமல் உண்மை யுணர்வோடிருப்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்கின்றதென்னலாம்.

ஹிந்து மதத்தில் இம்மாதிரியான சமத்துவங் கொடுக்க மறுக்கப்படுகிறது. ஹிந்து மதத்திலிருக்கிற அனைவரையும் கடவுள் படைத்தார், கடவுளுடைய பிள்ளைகளே யாவரும் என்று சமய நூல்கள் ஆக்ஷேபமின்றி ஒப்புக்கொள்கின்றன. என்றாலும் அனுபவத்தில் பார்க்கும்போது கடவுள் சன்னிதானத்தில் எல்லா மக்களுக்கும் சம உரிமை வழங்கப்படுவதில்லை. சம உரிமை விரும்பினால் கொலைகளுங்கூட நடப்பதைக் காணலாம். கடவுள் கோவிலில் சுவாமி சன்னிதானத்தில் வித்தியாசமில்லாதிருப்பது எம்மதத்திலும் சம்மதமாயிருக்க ஹிந்து மதத்தில்மட்டும் அஃதில்லா தொழிந்து போனமை கூர்ந்து கவனிக்கத் தக்கதாகுமன்றோ? பார்ப்பன ஆணும் பெண்ணும் உள்வீடுவரை செல்லும் உரிமையைப் பெற்றிருக்கின்றனர். ஏனைய ஜாதியார் யாவருக்கும் அவ்வுரிமை இல்லை. இரண்டு கட்டிடம் தாண்டி இடங்கொடுக்கப்படுகிறது. மற்றும் சில ஜாதியினர்க்கு துவஜஸ்தம்பத்திற்கு வெளியே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அநேக குழுவினர் ராஜகோபுரந் தாண்டி வரக்கூடாதென்று கண்டிப்பான சட்டமிடப்படுகிறது. ஒரே ஹிந்து மதத்தில் பரம்பரையாகப் பிறந்து அதே கடவுளை வழிபட்டு ஹிந்துமதச் சட்டங்கட்குக் கீழ்ப்படிந்து நிற்கும் மக்களில் இப்படிப்பட்ட வித்தியாசமிருப்பது நியாயமா? அதே கோயிலுக்கும் விக்கிரகங்கட்கும் எல்லா மக்களும் இயன்ற அளவு உதவிசெய்திருக்க, உரிமை மட்டும் வித்தியாசப்படலாமா? உதாரணமாக விக்கிரகத்தைக் காலால் மிதித்துக் கையால் புரட்டி உளிகொண்டடித்து உருவாக்குவது யார்? கல் தச்சனன்றோ? செம்பு விக்கிரகத்தை வார்ப்பதும் ராவு

வதும் உருவாக்குவதும் ஸ்தபதியெனும் ஆசாரியல்லவா? கோயில் கட்டுவதும் செங்கலறுப்பதும் சுண்ணும்பு நீற்றுவதும் சிற்பவேலை சித்திரவேலை செய்வதும் பலவகுப்பு மக்கள்தானே? இத்தனைக்கும் பொருள் கொடுப்பவர் நாட்டுக்கோட்டைச் செட்டியாரோ அல்லது ஒரு முதலியாரோ பிள்ளையோ என்று கூறவேண்டியதில்லை. இத்தனை பேரும் சேர்ந்து தங்கள் பொருளாலும் உடலுழைப்பாலும் கட்டப்பட்ட கோயிலில் இவர்களால் செய்யப்பட்ட விக்கிரகத்தைப் பார்ப்பதற்கும் முடியாமல் தொட்டால் தீட்டாகிவிடுமென்றுங் கூறித் திரைபோட்டு மறைத்துவைத்துக் காசுபெறல் ஒழுங்காகுமா? வேலை செய்கிறவரை இந்த மனிதரால் தீட்டாகாம லிருந்து வேலை முற்றும் முடிந்தவுடன் தீட்டாகுமென்று கூறி வெளியே தள்ளப்படுகிறது.

சமய நூல்களில் திருப்பணி செய்பவர் கைலாசத்தில் சிவபெருமானுடன் இரண்டறக்கலந்து முக்தியின்பம் பெறுவாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் "கல்லினுல் பணிகள் செய்வோர் கைலைவிட் டகலாரன்றே" என்று கூறப்படுகிறது. கைலாசத்தை விட்டுப் பிரியாதிருக்கும்படியான லைசென்ஸ் பெற்றவருக்குத் தாம் கட்டிய கோவிலிலேயே சுவாமி விக்கிரகத்திற் கருகில் செல்ல யோக்கியதையில்லையென்று பகிரங்கமாகக் கூறி வெளியே தள்ளப்படுகிறது. கயிலாயத்தில் உயிருடனிருக்கிற கடவுளுக்கருகில் இருக்கும்படியான உரிமை பெற்றதாகக் கருதி லட்சக்கணக்கான பொருளைக் கொடுத்த ஒருவர் அதே கோயிலில், தன்னுல் வைக்கப்பட்ட விக்கிரகத்தைப் பார்க்க முடியாதபடி வெளியே நிறுத்தப்படுகிருர். விபூதி பெற்ற திரவியம், அது

உடலின்மேல்பட்டாலும் முக்திகிடைக்கும் என்று சமய
நூல் கூறுகிறது. பார்ப்பனரல்லாத ஒருவர் ஒருமூட்டை
விபூதியைக் கரைத்துக் குளித்துவிட்டுப் போனாலும்
கோவிலினுள் ஐயர் சொல்கிற இடம் வரைதான் போக
லாம். அப்பால் ஒரு அடிகூட வைக்கவிடமாட்டார்கள்.
"சிவா சிவா என்பார் பின் சிவன் உமையாளொடுந் திரி
வன்" என்று நூல் கூறுகிறது. சிவா சிவா என்று
தொண்டை வரண்டு மயக்கம் வருகிறவரை கதறினாலும்
உள்ளே நிற்கிற பிராமணரும் பிராமணமாதரும் சன்னிதா
னத்தை விட்டு விலகினால்தான் விக்கிரக தரிசனம் கிடைக்
கும். சிவன் உமையாளோடு சிவசிவா பேர்வழிகட்குப்
பின்னால் ஒரு நாளும் திரிகிறதில்லை. ஆனால் முன்னா
லிருக்கிற கல் விக்கிரகத்தின் பக்கத்திலும் போக வகை
யில்லை யென்பதை உணரவேண்டும். ருத்ராக்ஷம் ஒன்
றணிந்தாலே முக்தி சித்திக்கும் என்று ஏட்டில் எழுதப்
பட்டிருக்கிறது. பார்ப்பன ரல்லாதா ரொருவர் ஒரு
வண்டி ருத்ராக்ஷங்களைச் சுமந்து சென்றாலும் ஐயர்
நிற்கலா மென்று சொல்கிற இடத்துக் கப்பால்
நெருங்க முடியாது. "கங்கையில் முழுகினால் சகல
பாவங்களும் முன் வினை பின் வினைகளும் தீரும்" என்று
கூறப்படுகிறது. ஆயிரம்தரம் முழுகிவிட்டு வந்தாலும்
ஐயர் கோயிலுக்குள்விட அனுமதிக்கமாட்டார். மதுரைக்
குப்போனால்முக்தி; பொற்றாமரையில் முழுகினால் முக்தி;
சிதம்பரம் நடராஜாவைப் பார்த்தால் முக்தி; அண்ணா
மலையை நினைத்தால் முக்தி; காவிரியில் குளித்தால்
முக்தி என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. இத்தனை
யும் செய்துவிட்டு ஒருவன் கோயிலினுள் சென்றால்
உள்ளே வராதே, நீ வந்தால் தீட்டாகிவிடும், கடவுள்

தீட்டாவார், கட்டிடம் தீட்டாகும் என்றுதான் கூறப்படுகிறது. ஹிந்து மதத்தில் பிறந்த ஒருவர், தருமஞ் செய்கிற ஒருவர், ஹிந்து மதத்தை மீருத ஒருவர், ஹிந்து மதக் கடவுளுக்கு ஆலயங்கட்டிய ஒருவர், அந்த சாமிக்குத் திருவிழா செய்கிற ஒருவர், அதற்கு ஆறு காலம் நைவேத்தியம்செய்கிற ஒருவர், முக்திக்கு அதிகாரம் பெற்ற ஒருவர், ஹிந்து மத நூல்களில் விதித்த புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த ஒருவர், இரவு பகல் எப்போதும் சிவ சிந்தனையும் தேவார பாராயணமும் செய்யும் ஒருவர், விபூதியையும் ருத்ராக்ஷத்தையையும் உடல் நிறைய அணிந்து பஞ்சாக்ஷர ஜெபம் செய்யும் ஒருவர், தாழ்ந்த ஜாதியென்றும் கோவிலினுள்ளே வந்தால் தீட்டாகிவிடுமாதலால் கர்ப்பக்கிரகத்திற்குள் வரக்கூடாதென்றும், வந்தால் கடவுள் பேராலுள்ள கல் விக்கிரகம் தீட்டாகிவிடும் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் கதியே இப்படி இருக்குமானல் தீண்டாதவர் என்பவர் நிலையைப்பற்றிக் கூற வேண்டியதில்லை. தீண்டாதவரென்போர் மட்டும் தடுக்கப்படுவதென்பதும் இல்லை. மதுரைக் கோயிலினுள் நுழையக் கூடியவர் திருச்செந்தூர்க் கோவிலினுள் நுழையக் கூடாது. திருச்செந்தூர்க் கோயிலினுள் நுழையக்கூடியவர் சிதம்பரத்தில் நுழையக் கூடாது. இந்த நிலைமையில் ஒரே ஜாதியார் ஒரு ஊரில் அனுமதிக்கப்படுவதையும் மற்ரொரு ஊரில் தடுக்கப்படுவதையும் காண்கிறோம். அங்கு இங்கு எனுதபடி எங்கும் நிறைந்து அறிவுமயமாகவும் ஜோதிமயமாகவும் பிரகாசிக்கிறதாகக் கருதப்படும் கடவுள் ஆதித்திராவிடனின் உடலில் இல்லையா? என்று கேட்கும் கேள்விக்கு என்ன பதில் கூறமுடியும்? "அரிது

அரிது மானிடராதல் அரிது" என்று கூறப்படுகிறது. உலகத்தில் தோன்றியுள்ள எல்லா ஜீவராசிகளிலும் மனிதப் பிறப்பே உயர்ந்ததென்று கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மானிடப் பிறவியானது கோயிலில் சுவாமியின் சன்னிதானத்தில் தாழ்ந்ததென்றும், மாடு புனுகு பூனை போன்ற மிருகங்களும், கிளி புறா காக்கை போன்ற பட்சிகளும், ஈ எறும்பு முதலிய பிராணிகளும் அனுமதிக்கப்படுவதும் நேர்மையாகுமா? தெய்வ பக்தியுள்ளவன் தாழ்ந்த வகுப்பானாக இருந்தாலும் கடவுளாகவே கருதப்பட வேண்டுமென்று சைவ வைணவ ஆசாரியர்கள் கூறியிருக்கின்றனர்.

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே.

என்று தேவாரத்தில் திருநாவுக்கரசர் கூறியிருக்கின்றார். வைணவ அடியார்களில் தொண்டரடிப்பொடியாழ்வார் கூறிய பாசுரங்கள் நாலாயிரப்பிரபந்தத்தில் மிளிர்கின்றன. அதிலொன்று வருமாறு :—

வானுளா ரறியலாகா வானவா என்பராகில்
தேனுலாந் துளபமாலைச் சென்னியா என்பராகில்
ஊனமாயினகள் செய்யும் ஊனகாரகர்க ளேனும்
போனகம் செய்தசேடம் தருவரேல் புனிதமன்றே.

அமரவோ ரங்கமாறும் வேதமோர் நான்குமோதி
தமர்களில் தலைவராய சாதிஅந்தணர்க ளேனும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோர் அளவில்ஆங்கே
அவர்கள்தாம் புலையர்போலும் அரங்கமா நகருளானே.

இவற்றால் பக்தியுள்ளவர் பெரியவரென்பதும், கடவுள் நெறியில் ஜாதி குறுக்கிட இடமில்லை யென்பதும் தெளிவாக விளங்குகின்றன. கோவிலினுட் புகுதற்குப் பக்தியொன்றே முக்கியமாக ஆழ்வார் - ஆசாரியர்களால் கொள்ளப்பட்டிருக்கின்றதென்பது தெளிவாக விளங்குகிறது. பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் கதையெழுந்திருப்பதைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். வேடர் குலத்தில் பிறந்த கண்ணப்பர் புன்புலால் தின்றவர். கல்வி வாசனையே இல்லாதவர். பரிசுத்தமான கடவுள் சன்னிதானத்திற் புகுந்து சுட்டுக் கடித்து உமிழ்ந்த மாமிசத்தை நைவேத்தியம் செய்தார். அப்படிப்பட்டவரைக் கண்டு கடவுள் ஓடிப்போகவில்லையென்றும் கல் விக்கிரகத்தில் இருப்பதாகக் கருதப்பட்ட கடவுள் உயிர்பெற்று எழுந்து பேசினார் என்றும் பெரியபுராணங் கூறுகிறது. இதை யொட்டியே திருப்பாணாழ்வார் சரிதை நிகழ்கிறது. ஆதி திராவிடர் குலத்தில் பிறந்த திருப்பாணாழ்வார் குளக்கரையி லிருக்கும்போது அதன் வழியாகச் சென்று நீர் எடுப்பது தீட்டென்று கருதிய ஐயங்காருக்குப் புத்தி புகட்டப்பட்டிருக்கிறது. அதே ஆதிதிராவிட திருப்பாணாழ்வாரைக் கோயில் அர்ச்சகர் தோளில் தூக்கிக்கொண்டு ஸ்ரீரங்கம் கோவிலினுள் சென்றாரென்று கதை எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் திருப்பாணாழ்வார் விக்கிரகம் இன்னும் பெருமாள் ஆலயங்களுள் இருக்கிறது. அவருடைய பாடல் இன்

றும் நாலாயிரப்பிரபந்தத்தில் நடு இடம் பெற்றிருக்கிறது. இவற்றால் கடவுளிடம் அன்புகொண்ட எவருக்கும் ஜாதி குலம் இல்லையென்பது வெட்ட வெளிச்சமாகக் கூறப்பட்டிருக்கிறது.

முன்னோர் கடவுளை எப்படி நோக்கினார்களென்பதும் அடியார்களை எப்படி நோக்கினார்களென்பதும் இதுவரை கூறியவாற்றால் ஒருவாறு விளங்கும். தற்காலத்தில் வரும்படியொன்றையே கருதும் ஆட்கள் வசத்தில் கோவில் ஆதிக்கம் சேர்ந்துவிட்டதால் அங்கு இன்று நடக்கும் கொடுமைகள் எண்ணற்றனவாகப் பெருகிவிட்டன. பழய அடியார்களின் பக்திக்கும் பாடல்கட்கும் தற்கால நிலைமைக்கும் ஏணிவைத்து எட்டவும் முடியாதென்பதை யாவரும் அறிகின்றனர். என்றாலும் துணிவான சீர்திருத்தங்கள் செய்யப் பின்வாங்குகின்றனர். தங்கள் தங்கட்கனுகூலமாக இருக்கிறவரை சாஸ்திரம் பேசுவதும் இம்மாதிரியான வகையில் அவற்றைத் தள்ளி வழக்கத்தைக் கையாள்வதுமாகக் கோயில் ஆசாமிகள் நடக்க முற்படுகின்றனரென்பது கவனிக்கத் தக்கதாகும்.

தற்கால நிலைமையை நோக்கும்போது அபிஷேகப் பொருளைத் திருடுபவரும் புகையிலை போட்டுக்கொண்டு மடைப்பள்ளியினுள்ளேயே உமிழ்பவரும், குளித்தே அறியாதவர்களும், கோயில் விக்கிரகத்திற்கு பக்தர்கள் அணிவிக்கும் பூமாலைகளைத் தாஸி வீட்டிற்கு அனுப்பி வருபவரும் விக்கிரகத்தைத் தொட்டுத்தடவிப் பூசை செய்ய இடமிருக்கிறது. அவர் செய்யும் அத்தனை இழி செயலையும் பற்றிக் கவலையில்லை. கோயில் சுவாமியினிடத்து உண்மையான பக்தியுடன் ஏராளமான பொருளை வழங்கும் ஆசார சீலனான பார்ப்பனரல்லா

தானுக்கு விக்கிரகத்தின் உருவத்தை எட்டி நின்று பார்க்கும் உரிமைதானுண்டு. ஆனால் ஆசாரமென்பதே இல்லாமல் அணுவளவு பக்தியுமின்றி வயிற்றுப் பிழைப் புக்கு அதே சாமி சொத்தைத் திருடியும் கூலிக்கு வேலை செய்யும் ஒருவனுக்கு சகல சுவாதீனமு மிருக்கிறது. மற்றெல்லா பக்தர்களையும் நாய் கழுதை மாதிரி நினைத்து அப்புறப்படுத்தவும் அதிகார மிருக்கிறது. இதனால் கோயிலின் நிலை ஒருவாறு விளங்கும். சமய வழி பற் றியோ அல்லது சாஸ்திர விதிகட்குக் கட்டுப்பட்டோ கோயில்கள் நடைபெறவில்லை யென்பதும் அயோக்கிய ரூனாலும் பிராமண ஜாதியாரின் வாழ்வுக்கே வகைப்படுத் தப்பட்டிருக்கிற தென்பதும் தெள்ளத் தெளிய விளங்க வில்லையா? வாயார வாழ்த்தி மனமாரத்துதித்துக் கட வுள் அருளைப் பெறவேண்டுமென்று சமயகுரவர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் மக்கள் மனத்தில் கடவு ளென்பதென்ன அதன் தத்துவமென்பதென்ன வென்ற கேள்விகளே எழாதவாறு செய்யப்பட் டிருக்கிறது. அதோடுமட்டு மல்ல. தாங்கள் எவ்வித தப்பிதத்தைச் செய்தாலும் குருக்களிடம் பொருள்களைக் கொடுத்தால், அல்லது அபிஷேகம் செய்தால், தளிகை ஆராதனை செய்துவிட்டால் தப்பித்துக் கொள்ளலாம் என்ற மனப் பான்மை தலைதூக்கி நிற்கிறது. உதாரணமாக, திருடும் ஒருவன் தன் திருட்டு வெளிப்படாமலிருக்கும்பொருட்டு ஒரு பிரார்த்தனை செய்துகொள்கிறுன். பிள்ளை யில்லாத வராகிய ஒருவர் ஒரு மண்டபப்படியைச் செய்ய முன் வருகிறார். இறந்தபின் சுகமாக இருப்பதற்காக தங்க நகையை ஒருவர் செய்து கொடுக்கிறார். நோயில்லாதி ருக்க அர்ச்சனை ஏற்படுத்துகிறார். சகல சித்தியும் உண்

டாக ஒரு திருவிழாவையே நடத்த ஒருவர் முன்வருகிறார். சதுர்க் கச்சேரியும் நடத்துகிறார். இப்படியே சுயநல காரியங்கட்கு கடவுள் துணையை நாட முன்வருகின்றனர். எந்தக்கொடுமையான செயலைச் செய்தாலும் அபிஷேக ஆராதனைகளால் கடவுளைக் கட்சிசேர்த்துத் தப்பித்துக்கொள்ளலாமென்ற மனப்பான்மை பொது ஜனங்களிடம் உண்டாகிவிட்டது. கடவுளென்பது ஆசாரியர்கள் கூறியபடி "சர்வபரம்பொருளானது; வாக்கு மனத்திற் கெட்டாதது; அறிவுக்கறிவாகி நிற்பது; தத்துவ ரூபமாகித் தத்துவங் கடந்து தனிப்பட்டிருப்பது" என்ற உணர்வு மாண்டுபோய் விபசாரம் களவு பொய் புரட்டு எல்லாவற்றுக்கும் அபிஷேகம் தளிகை நைவேத்தியம் செய்தால் உடந்தையாக இருந்து இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கும் என்று கருதும்படியான நிலைக்குக்கோயில் ஐயர்கள் கொண்டு வந்து விட்டிருக்கின்றனர். இதையே பின்பற்றி ஐயனார் கறுப்பர் காளி பேச்சி முதலிய கோவில் பூசாரிகளும் தொழிலை ஆரம்பித்துவிட்டார்கள். பொதுவாக இன்றைய நிலையில் கோயில்கள் ஒரு பெரிய முதலில்லா வியாபாரமாகி நிற்பதை உண்மைப் பக்தர்கள் கண்டு கண்ணீர்விடுவதைத் தவிர வேறு வகையுண்டோ? கோயில்கட்கு ப்ராதான்யங்கொடுத்த சமயாசாரியர்களும் ஆழ்வார்களும் இன்று வந்து பார்ப்பாராயின் இப்படிப்பட்ட கொடுமைக்கா நம்முடைய பாசுரங்கள் ஆக்கமளித்துவிட்டன வென்று அருத்துயராடைவார்க ளென்பதில் ஐயமில்லை. நல்லெண்ணத்துடன் அன்று ஏற்படுத்தப்பட்ட கோயில்கள் இன்று வியாபாரசாலைக ளாக்கப்பட்டுத் துன்பம்விளைக்கின்றன.

மற்றவர் தொட்டாலும் சமீபத்திற் போனாலும்

சுவாமி விக்கிரகத்தின் பரிசுத்தத் தன்மை போய்விடுவ தாகக் கூறுவது சுத்தப் புரட்டென்பதற்குச் சில சான்று கள் தருகிறோம். குளக்கரைகளில் பிள்ளையார் விக்கிர கங்கள் பல இருக்கின்றன. அவற்றை எவருந் தொட லாம். பெரியவர் குழந்தைகள் ஆண் பெண் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் யாவரும் அதற்கு அபிஷேகம் செய் தும் சோறு பொங்கிப் படைத்தும் பலகாரங்களைத் தங் கள் வீடுகளிலேயே செய்து படைத்தும் வருகின்றனர். அவர்களும் இந்தப் பார்ப்பனர் கோவில்களிற்போலவே இஷ்டசித்தி முதலியன உண்டாவதாகக் கருதுகின்றனர். இப்படியே குயவர்கள் முதலியோர் பூசையுள்ள கறுப்பர் கோயில்கள் ஐயனார் கோயில்களில் உள்ள சுவாமிகளின் நிலையுமிருக்கிறது. ஐயனாருக்கும் கறுப்புத் தெய்வங் கட்கும் இருப்பதாகக் கருதப்படும் அபார சக்திகள் பிராமண ஸ்பரிச விசேஷத்தில் ஏற்படவில்லை. பார்ப் பனரல்லாதார் தொடுவதால்தான் அந்தச் சாமிகட்கு அபாரசக்தி யேற்பட்டிருக்கிற தென்று அந்தக் கோவில் களின் பூசாரிகள் கூறிப் பெருமைப்படுகின்றனர். மற்ற வர் தொடுவதால் அதன் சக்தி போய்விட்டதாக எவரும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. இவற்றைத் தவிர ஆதித் திராவிடரைக் குருக்களாகக்கொண்ட நொண்டி, முனியன், பேச்சி, காளியம்மன் முதலிய பல தெய்வங்களுக்குப் பல கோவில்களுமுண்டு. அவற்றிலுள்ள விக்கிரகங்கள் பஞ்சமர் தொட்டுப் பூசைசெய்யும்போது ஓடிவிடவில்லை யென்றே கருதப்படுகிறது. அந்தக் கோயில்களில் செட்டியார்களும் முதலியார்களும் பலவகைப்பட்ட ஐயர் மார்களும் தங்கள் மனைவி மக்களுடன் வந்து கும்பிட்டு விபூதி வாங்கி வருவதைக் காண்கிறோம். சிவாலயம்

விஷ்ணுவாலயங்களில் தீராத பேயாட்டம் பிசாசாட்டம் முதலியவற்றை இங்கு வந்து தீர்த்துக்கொள்ளலாமென்று நம்பிப் பிரார்த்தனைகளும் செய்துகொள்ளுகின்றனர். மலாய்நாடு பர்மா போன்ற பகுதியிலும் இந்தியாவிலேயே பல இடங்களிலும் பார்ப்பனச்சாமி என்று கருதப்படுகிற சுப்பிரமணியசாமிக்குப் பண்டாரங்களே பூசைசெய்து வருவதையும் அந்த சுவாமிகள் ஐயர் ஐயங்கார்களின் சுவாமிகளைவிட சக்தியில் சிறந்திருப்பதாகக் கூறுவதையும் நாமறிந்திருக்கிறோம். இவைகளை உற்று நோக்கும்போது பார்ப்பனர் மற்றவர்களை யேமாற்றக் கோயில்களைக் கட்டச் செய்து கட்டியவர் தலையிலேயே தேனைத் தடவிவிட்டு அந்தக் கோயிலிலேயே தீராத அவமானம் செய்து மானபங்கப்படுத்துவதற்கும் அதன் மூலம் தாங்கள் குடும்பத்தோடு குலத்தோடு யாவரும் வாழ்வதற்கும் மற்றவர் யாவரும் இழிந்தவர் என்று சொல்லுவதை அனுபவ பூர்வமாக நிச்சயப்படுத்துவதற்கும் உபயோகித்து வருகின்றனரென்பதை எவரே மறுக்க முடியும்? இதைத் தவிர பிராமணருக்கு அணுவளவு பக்தியிருப்பதாக எவரும் நிரூபிக்க முடியுமா? இந்த ஆகாசப் புரட்டை அறியமுடியாமல் ஏமாந்த சோணகிரிகள் கோயில் கட்டியும் அபிஷேகம் முதலிய கட்டளை வைத்துப் பிராமணர்களுக்குப் போட்டழுவதோடு மட்டுமல்லாமல் "நாங்கள் சின்னச்சாதி, நீங்கள் பெரிய ஜாதி, நாங்கள் என்ன பக்தி செய்தாலும் உயரமுடியாது, நீங்கள் எத்தனை இழிதொழிலைச் செய்தாலும் தாழமாட்டீர்கள்" என்று செப்புப் பட்டயம் எழுதிக்கொடுத்து வருகின்றனர். இதுதான் கண்டபலன். "இந்தக் கோயிலுக்குப் போகவேண்டும், முக்காலும் திருக்கோயில்

சூழவேண்டும், அபிஷேகம் பண்ணவேண்டும், பிராமணன் காலால் மிதிக்கும் நீரைக் குடிக்க வேண்டும், மூட்டைக் கணக்கான விபூதி ருத்திராக்ஷ வேஷம் போட்டுக்கொண்டு நாங்களும் திருக்கூட்டமாக வருகிறோம், நீங்களும் பிள்ளை குட்டியோடு வந்து சேருங்கள், எல்லாருங்கூடி விக்கிரகத்தை அடித்து வைத்து அதற்குக் கோவிலும் கட்டி வைத்து வேளைதவறாமல் சாப்பாடும் போட்டு ஐபரையும் காவல் வைத்து கிட்டப் போகக் கூடாத 'சின்னச்சாதி' என்று சாஸ்வத அடிமைத் தனத்தையும பெறுவோம்" என்று கூறவும் மனிதர்கள் இருக்கின்றன ரென்பதை நினைக்கும்போது நெஞ்சு கொதிக்கின்ற தன்றோ? ஒரே சமயம், ஒரே கடவுள், அவரால் தோன்றிய மக்கள். அவரால் உலகில் யாவரும் வாழ்கின்றனர். எல்லாரையும் கடவுள் கையால் தடவித் தடவிச் செய்தனுப்பி யிருக்கிறார். அப்படிப்பட்ட கடவுள் சன்னிதானத்தில் இத்தனை கொடுமைகள் நடக்கின்றன. இதனை உணர்ந்து மக்கள் முன்னேற வேண்டுமென்பதே நமது பேரவாவாகும். பிராமண ரல்லாதவர்களால் பூஜை செய்யப்படும் கோயில்களிலும் ஆதிதிராவிடர் போன்றவரை உட் செல்லுமாறு அனுமதிப்பதில்லை. காரணம் இவர்களும் தங்கட்குக் கீழ் சில ஜாதியாரிருக்கவேண்டு மென்று விரும்புவதேயாகும்.

கடவுள் பூஜையைக் கட்டாய வரியாக்குதல் அறிவுடைமை யன்று. இஷ்டப்பட்டவர் தாமே பூஜை செய்வதுதான் சாலச்சிறப்புடைய தாகும். கடவுள் பூஜையென்பது மதஸ்தாபகர்கள் கருத்துப்படி மனம் பண்படைவதற்காகவும், அதன்பயனாக உயர்ந்த பதவி பெறுதற்காகவுமே ஏற்பட்டதென்று தீர்க்கமாகக் கூறப்பட்

டிருக்கிறது. அப்படியிருக்கும்போது ஒருவருக்காக இன்னுமொருவர் பூஜைசெய்வதால் என்னபலன் கிடைக்குமென்பதை உற்று நோக்குதல் வேண்டும். பசித்துத் துடிக்கும் குழந்தைக்கும், கயிற்றை யிழுத்துக் கழுத்து நெருங்கத் தாய்ப்பா லருந்த வருந்திபுழலும் கன்றுக்கும் கொடாமல் பாலைக் கறந்துகொண்டு போய் ஐயரிடம் கொடுப்பதும் அவர் அதனைக் காய்ச்சி தாஸியின் வாயிலோ அல்லது காப்பிக்கிளப்புக்கோ கொடுப்பதும் நேர்மையன்று. தருமமுமன்று; பக்தியுமன்று. உண்மையான ஏமாற்றமும் கொடுமையும் தீங்குமே யாகும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நாள்தோறும் ஊர்தோறும் நடைபெறுவதைக் காண்கிறோம் பெண் மக்களும் ஆண் மக்களும் கொள்ளும்பக்தி ஏமாந்துபோவதைத் தவிரப் பலனளிக்க வில்லை. விடிவதன் முன் எழுந்து தூநீராடி பட்டைபட்டையாக விபூதியணிந்து சிவநாம பாராயணத்துடன் பசும்பாலைக் கரத்திலேந்தி ஆசாரபரனுகச் செல்லும் பக்தர் வெளிமண்டபத்திலிருந்து சாமி சாமி யென்று சத்தம் போடுகிறார். ஐயர் பல்லும் துலக்காமல் கொடுவாயுங் கழுவாமல் பாலையும் மற்ற பொருள்களையும் வாங்கிச் செல்வதைக் கோயில் செல்வோர் சாதாரணமாகக் காணலாம். தாஸி வீட்டிலிருந் தெழுந்து அங்கு பூசிய சந்தனத்துடன் கோவில்களில் தோன்றுவது சாதாரணமானதேயாகும். அவர்களை இந்த பக்தர்களின் பொருட்டுக் கடவுளை வேண்டும்படி சொல்வது எவ்வளவு கொடுமையாகும். பரம பக்திமானுக இருக்கும் மற்ற ஜாதியார் வெளியே நின்றுகொண்டு ஐயரிடம் உயிரை ஒப்புவிக்கிற மாதிரி பக்தியை ஒப்புவிப்பதில் அணுவளவாவது பலன் சித்திக்குமா? ஜாதி வேற்றுமை

பாராட்டப்பட்டு அது முற்றிப்போய் கோவில்களிலும் பாராட்டப்படுவதன் பயனுக பக்திக்கு மதிப்பும் பொருளுமின்றி யொழிந்துபோய் விட்டது. பக்தி நிறைந்த ஒருவர் பக்தி யென்பதே அணுவளவுமில்லாதவர் மூலம் பக்தி செலுத்துவ தென்பது பைத்தியக்காரத்தனமேயன்றி வேறன்று. தண்ணீர் பாயும் வாய்க்காலில் கல்லைவைத்து அடைக்கிற மாதிரி குருக்கள் இருந்துவருகின்றனர். விக்கிரக வணக்கம்புரிய விரும்புபவர்கட்கு இனி ஒரே வழிதானுண்டு. தெருவிலிருக்கும் பிள்ளையார்கள் அல்லது வீடுகளில் ஆத்மார்த்த பூஜையென்று வைதீகர்கள் வைத்து வணங்குகிற மாதிரியான விக்கிரகங்கள் இதையல்லாது சுற்றுச் சுவர் வைத்துள்ள கோயில்களில் பக்திக்கு இம்மியும் இடமில்லை. அந்தக் கோயில்களினுள் புலி கரடி மாதிரி மனிதர்கள் ஆட்சி செலுத்துகின்றனர். அவர்கட்குக் கடவுளும் பக்தியும் பிறவும் பணமொன்றே யாகும். பழைய கடவுள் விக்கிரகங்களைத் பணம் சம்பாதிக்கும் காட்சிப் பொம்மைகளாகக் கருதி விட்டனர். வருபவரிடம் பொருள் பறிப்பதொன்றே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். பக்தியென்ற மயக்கத்தில், பழைய பெரியார்கள் வழிபட்ட இடமென்ற எண்ணத்தில் செல்கின்றவர் பலர். கறையான் கட்டிய புற்றில் பாம்புகள் குடியிருக்கின்றன வென்பதைப் பொது ஜனங்கள் உணரவேண்டும். ஒன்று கோயில்களின் கதவுகளைக் கழற்றிவிட்டுக் கடவுளை யாவரும் கட்டிப்பிடித்து காசிக்கோவில்மாதிரி அபிஷேகமோ ஆராதனையோ நைவேத்தியமோ யாருக்கு என்ன இஷ்டமோ அதனைச் செய்யும்படி விட்டுவிடவேண்டும். இப்படிச் செய்வதால் கோயிலில் பக்தியுள்ளவர் தவிர மற்ற

வர் செல்லமாட்டார். செல்ல வேலையுமில்லை. அதை யொட்டிப் பிழைப்பவர் ஏற்பட்டதால்தான் புரட்டும் பித்தலாட்டமும் கோயிலைத் துணைப்பற்றி வளர்ந்து பயிரை அழிக்கும் களையாகப் பல்கியிருக்கின்றன. இது முடியாதவர்கள் தெருவிலுள்ள பிள்ளையார்களை வணங்குதல் நலமாகும். அங்கே ஜாதியில்லை. ஆண் பெண் பேதமில்லை. இஷ்டப்பட்டவர் இஷ்டப்பட்ட மாதிரி வணங்கலாம். கடவுள் பொது என்ற தத்துவத்திற்கு அங்கேதான் அழிவு ஏற்படாதிருக்கிறது. அதற்குச் சரிப்படாதவர் தம் வீடுகளில் தனியாக விக்கிரகங்களை வைத்து வணங்குவது பொருத்தமானதாக இருக்கும்.

3572

குமரன் பவர் பிரஸ், காரைக்குடி—1933.

சீர்திருத்தப் புத்தகங்கள்.

கூழைரங்கன்	...	1—0—0
சொர்னவல்லி	...	1—0—0
நமது பலசரக்குக்கடை	...	0—8—0
குட்டிச்சாத்தன் கட்டுரைகள்	...	0—4—0
மான நஷ்ட வழக்கு	...	0—1—0
பலதிரட்டு	...	0—1—0
காசில்லாமல் உபதேசம்	...	0—1—0
கடவுளும் கோயிலும்	...	0—1—0

மானேஜர்,

குமரன் ஆபீஸ், காரைக்குடி.